**2026 ஜூலை மாதம் 27– ஆம் தேதி திங்கட்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**O.S. நெம்பர் : 108/2024**

O.S. No.: 108/2024 – குருசேகரன் DW2 27.07.2026

த/பெ.சீனிவாசன்

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. நான் எங்கு நிரந்தரமாக வசித்து வருகிறேன் என்றால் பெரியகுளம், தென்கரையில் வசித்து வருகிறேன். வீராச்சாமிக்கும் எனக்கும் என்ன உறவு முறை என்றால் எனது அக்காவின் கணவர் ஆவார். வாதிக்கும், பிரதிவாதிக்கும் தாய்மாமன் என்றால் பிரதிவாதிக்கு தாய்மாமன் ஆவார். வாதிக்கு உறவுமுறை என்றால் சரிதான். வீராச்சாமியின் குடும்ப விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 உயில் எழுதும்போது யார் யார் உடனிருந்தார்கள் என்றால் வீராச்சாமி, சுசீலா, ராஜாராம் மற்றும் நான் ஆகியோர் இருந்தோம். உயில் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது.

2. உயில் சாசனம் கையால் எழுதப்பட்டதா, தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் கையினால் எழுதப்பட்டது. உயில் சாசனத்தை யார் எழுதினார் என்றால் பத்திர எழுத்தர் ஆவார். பத்திர எழுத்தரின் பெயர், விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. உயில் சாசனம் எழுதும்போது அதிலுள்ள சரத்துக்களை யார் சொன்னார் என்றால் வீராச்சாமி நாயுடு ஆவார். உயிலில் உள்ள அனைத்து விபரங்களும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, வீராச்சாமி நாயுடு மகனுக்கு உயில் எழுதி

வைத்துள்ளதாகவும், அதில் என்னை சாட்சியாக கையொப்பம் செய்ய சொன்னார். பி.வா.சா.ஆ.4 உயிலில் உள்ள சரத்துக்கள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரத்துக்கள் பற்றி எனக்கு தெரியாது, வீராச்சாமி தனது மகனுக்கு எழுதிய உயிலில் நான் கையொப்பம் செய்துள்ளேன்.

3. நிரூபணவாக்குமூலத்தில் உள்ள விபரங்களை தெரிந்து நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். உயிலில் உள்ள சொத்துக்கள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் வீடு எழுதி வைத்ததாக சொன்னார். மற்ற சொத்துக்களை பற்றி தெரியுமா என்றால் தெரியாது. ராஜாராமிற்கு என்ன சொத்துக்கள் பிரிக்கப்பட்டன என்றால் எனக்கு தெரியாது. உயிலில் கண்ட வீட்டில் யார் வசித்து வருகிறார்கள் என்றால் ராஜாராமின் மனைவியும், பிரதிவாதி ஜான்சியும் குடியிருந்து வருகிறார்கள். வாதி மட்டும் குடியிருந்து வருகிறார் என்றாலும், பிரதிவாதி குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. வீராச்சாமி எப்போது இறந்துபோனார் என்றால் 2008 ம் வருடம் ஆகும்.

4. வீராச்சாமி, ராஜாராமிடம் விடுதலை பத்திரம் எழுதி வாங்கிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வீராச்சாமிக்கு சொத்துக்களை எழுதி வைக்க உரிமையில்லை என்றாலும், பரம்பரை சொத்துக்களை ஒருவருக்கு மட்டும் எழுதிவைத்தது செல்லாது என்றால் சரியல்ல. வீராச்சாமி உயில் எழுதும்போது உடனிருந்த நபர்கள் தெரியுமா என்றால் வீராச்சாமியின் மனைவி சுசீலா, மகன் ராஜாராம், மற்றும் நான் ஆகியோர் உடனிருந்தோம். மேற்படி உயிலில் நான் மட்டும் சாட்சி கையொப்பம் செய்தேன். மற்றவர்கள் சாட்சி கையொப்பம் செய்யவில்லை

என்றால் எனக்கு தெரியவில்லை. வீராச்சாமியின் மனைவி எப்போது இறந்துபோனார் என்றால் 2022 ம் வருடம் ஆகும்.

5. வீராச்சாமி பிரதிவாதிக்கு உயில் எழுதிய விபரத்தை எப்போது சொன்னார் என்றால் 2 மாதங்கள் கழித்து சொன்னார். உயிலில் கண்ட வீட்டிற்கு நான்குமால் தெரியுமா என்றால் தெரியாது. வீட்டின் கதவு எண், மின்இணைப்பு எண் ஆகியவை குறித்து தெரியுமா என்றால் தெரியாது, ஆனால் வீடு நேதாஜி சாலையில் உள்ளது. ராஜாராமிற்கு அடிக்கடி மது பழக்கம் உண்டு என்றால் சரிதான். மேற்படி பழக்கம் எங்கள் குடும்ப நபர்கள் அனைவருக்கும் தெரியும் என்றால் சரிதான். ராஜாராம் எப்போது இறந்துபோனார் என்றால் ஞாபகமில்லை. வீராச்சாமி உயில் எழுதும்போது என்னிடம் சொல்லிவிட்டு எழுதினார் என்றால் சரிதான்.

6. வீராச்சாமி உயில் எழுதிவிட்டு கையொப்பம் செய்யும்போது நான் உடனிருந்தேன் என்றால் சரிதான். வாதிகள் வழக்கை தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் சொன்னார்கள். வழக்கில் சாட்சியம் அளிக்க என்னை யார் அழைத்தார்கள் என்றால் பிரதிவாதி அழைத்தார். பிரதிவாதி அழைத்ததின்பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் உயிலில் கையொப்பம் செய்ததால் நான் சாட்சியம் அளிக்கிறேன். நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை.

7. வீராச்சாமிக்கு உயில்எழுதி வைக்கவேண்டிய அவசியமில்லை என்றாலும், தூண்டுதலின்பேரில் அவர் உயில் எழுதிவைத்துள்ளார் என்றாலும், நான் பிரதிவாதியின் உறவினர் என்பதால்

அவருக்கு அனுரசணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, அவரது மகன் ராஜாராமின் நடவடிக்கை சரியில்லாததால் உயில் எழுதினார். ராஜாராம் தாவா 1ம் லக்க சொத்தில் வீட்டில் இறந்தார் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 27.07.2026 அன்று திங்கட்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.27 16:04:42 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
27.07.2026.